# காஞ்சி

ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை




தம்பிக்குக் கடிதம்!

## இதயத்தில் பூத்த மலர்

*

## எவர் எந்நிலை பெறினும்.....!

•

அந்திக்கலம்பகம்

○

# எவர் எந்நிலை பெறினும்....!

மலர் 1. ] [ இதழ் 2

கலைகிறது!

கரைகிறது!

கடையைக் கட்டுகிறது!

உடை மாற்றுகிறது!

கொடி இறக்குகிறது!

கட்சிகள் பல இப்போது இதுபோலச் செய்கின்றன என்றும், எல்லோரும் காங்கிரஸ் கட்சியிலே சேர்ந்து விடுவதாகவும், இதழ்களில் செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இன்னின்ன கட்சிகள் கலைக்கப்படுகின்றன; கொடிகள் இறக்கப்படுகின்றன, என்ற செய்தியை மகிழ்ச்சியுடன் வெளியிடுவதுடன், அந்தப் போக்கை வரவேற்றும் பாராட்டியும் எழுதிவிட்டு, ஏன் மற்றவர்கள் இதுபோலச் செய்யக்கூடாது; இது கட்சிகள் கலைக்கப்படும் காலம்; எல்லோரும் காங்கிரசில் சேரும் காலம்; வருவீர் விரைவாக! வருவீர் அனைவரும்! என்று அழைக்கின்றன சில இதழ்கள்.

கட்சிகள் பலப்பல இருப்பது ஆசியலில் கலாம் விளைவதற்கே மெத்தவும் பயன்பட்டு வருகிறது. எனவே தனித்தனி கொடி, கொள்கை, எதற்கு, எல்லோரும் காங்கிரஸ் கொடியின் கீழ் வந்து நிறைநிறிவீர் என்று காரணம் காட்டியும் இதழ்கள் சில எழுதுகின்றன.

காங்கிரஸ், ஜனநாயக சமதர்மத்தைக் கொள்கையாகக் கொண்டுவிட்டது, செயல்பட முனைகிறது; ஜனநாயகம், சமதர்மம் எனும் சுவையும் பயனுமிக்க கொள்கைகளைவிட, வேறு உண்டோ, தேவையோ, தேடிப்பெறுதல் ஆகுமோ! ஜனநாயகத்தையும் சமதர்மத்தையும் விரும்பாதாரும் உண்டோ! விருப்புவோர் வேறு கட்சிகளை வைத்துக்கொண்டு நேரத்தையும் நினைப்பையும் வீணாக்கிக்கொள்வானேன், தயக்கமின்றிக் காங்கிரசிற்கு வந்துவிடுவதே, முறை, நெறி; இது அவசியம்; அவசரமுங்கூட! எனறு வாதாடுகின்றன.

இந்த அழைப்பிலே கனிவுகூடக் கலந்திருக்கிறது; அறிகிறோம்.

இந்த அழைப்பு, நம்பிக்கையுடன்கூட விடுக்கப்படுகிறது; அதுவும் புரிகிறது.

ஒரு இதழ், இது ஒரு விழிப்பு ஏற்பட்டுள்ள காலம் என்று அறிவிக்கிறது,

வேறோர் இதழ், காங்கிரசுக்குப் புத்துயிர் ஊட்டும் முறை இது எனப் பூரிப்புடன் தெரிவிக்கிறது.

மற்றுமோர் இதழ், காங்கிரசின் தலைமையைக் காமராஜர் ஏற்றதன் உடனடிப்பலன், உருப்படியான பலன் இது என்று கூறி மகிழ்கிறது.

சேரச் செல்பவர்களும் இதுபோலவே, பெருமிதம் காட்டியும், பெருத்த நம்பிக்கையுடனும், பெரும் தொண்டாற்றும் வாய்ப்பு இது என்று கூறிக்கொண்டும் காங்கிரசுக்குள் நுழைகிறார்கள்.

ஆளுங் கட்சியில் ஒருவரோ, ஒரு குழுவினரோ, ஒரு கட்சியோ போய்ச் சேருவது, புதிதுமல்ல, கடினமானதுமல்ல.

மரம் பழுத்ததும் வௌவாலுக்கு அழைப்பு விடுகிறதா! இல்லை! ஆளுங்கட்சியில் சேருவது, எத்தகைய சுவையுள்ள ஆதாயம் தரத்தக்கது என்று தெரிந்தவர்கள். அழைப்பும் கிடைக்கிறது என்றால், தயக்கப்படவா செய்வார்கள்!

எந்தவிதமான ஆசையையும் நிறைவேற்றிக் கொடுக்கத்தக்க 'வல்லமை' காங்கிரசுக்கு, அது ஆளுங்கட்சியாக இருக்கும் காரணத்தால் இருக்கிறது. இதறகு வாதம், விளக்கம் காட்டி மெய்ப்பிக்கத் தேவையில்லை; அனைவருக்கும் எளிதாகப் புரியக்கூடியது. காண்ட்ராக்டிலிருந்து கவர்னர் பதவிவரையில், காங்கிரசின் ஆதீனகர்த்தாக்களால், அடியார்களுக்கு அளித்திட முடியும். ஆயிரம் ரூபாய் முதலீடு, ஐம்பதாயிரம் சர்க்கார் கடன், விற்பனைக்கான சந்தை, அதற்குத் தேவையான விளம்பரம், வேண்டுமா, காங்கிரஸ் கட்சியால் தரமுடியும்!

உங்கள் பெயரால் ஒரு பள்ளிக்கூடம் நடத்த வேண்டுமா, உங்கள் பள்ளிக்கூடத்துக்கு 'மானியம்' தாராளமாகவும் ஏராளமாகவும் தேவையா, காங்கிரசிடம் இருக்கிறது, அதனை அளித்திடும் வல்லமை!

மணிமண்டபமோ, பாலமோ, சந்தைச் சதுக்கமோ கலைக்கூடமோ உங்கள் பெயரில் அமைய வேண்டுமா, காங்கிரசின் தயவைப் பெறுவல், எளிதாக சிந்தியாகும்.

பட்டம் வேண்டுமா — பத்மபூஷண்!—பெறலாம்!! பதவி வேண்டுமா? உம்! கொஞ்சம் பல்லைக் கடித்துக் கொண்டிருந்து, பக்குவமாக நடந்து பராக்குக் கூறி வந்தால், பதவி உண்டு!

பாரிஸ், இலண்டன், டோக்கியோ, மாஸ்கோ, நியூயார்க் பெர்லின் — இங்கெல்லாம் சென்றுவர ஆசையா? பூ! இது என்ன பிரமாதம்! காங்கிரசிடம் கைகட்டிச் சேவகம் செய்யுங்கள், விவசாய மாநாடு, வணிகர் மாநாடு, கல்வி மாநாடு, கலை மாநாடு, ரயில்வே மாநாடு, மோடார் மாநாடு, முதியோர் மாநாடு, வாலிபர் மாநாடு, எழுத்தாளர் மாநாடு ஏற்றுமதியாளர் மாநாடு, கமிட்டி, தனிக்கமிட்டி, கமிஷன், தனிக்கமிஷன், என்ன பெயரிலேயோ ஒன்று, போய்வரலாம், ஏற்பாடுகள் செய்துதரப்படும்.

பெரிய மந்திரிகளுடன் உட்கார வேண்டுமா, பக்கத்தில் — உம்! வாய்ப்பு தரப்படும்! புகைப்படம் எடுக்கப்படும்! அதைப் பெரிய அளவாக்கி, பொன் முலாம் பூசப்பட்ட சட்டம் மாட்டி, உங்கள் வீட்டுக் கூடத்திலே தொங்கவிட்டுக்கொள்ளலாம்.

அதிகாரிகளை மிரட்டவேண்டும் என்று ஆசையாக இருக்கிறதா! சரி! காங்கிரசில் சேர்ந்து ஒரு சுற்று சுற்றிவிட்டு வந்து'பிறகு, ஒருபிடி பிடியுமே, எந்த அதிகாரியை வேண்டுமானாலும்! எந்த அதிகாரி என்ன பேசமுடியும்! மூச்சுவிடமாட்டார்! மார்பை நிமிர்த்தி நடக்கலாம்! அதையும் கண்டு புரிந்துகொள்ளாதவர்களிடம், தெரியுமா, நேற்று அந்த அதிகாரியை வெளு வெளு என்று வெளுத்துவிட்டேன் என்று சொல்லி மகிழலாம்,

அதிகாரிகளை மாற்றலாம், உண்டாக்கலாம்; கீழே தள்ளலாம், உம்! எல்லாவற்றுக்கும் வாய்ப்பு, கிடைக்கும், காங்கிரசில் புகுந்துகொண்டால்.

மற்றக் கட்சியில் உள்ளவர்களை, இழித்தும் பழித்தும் பேசவேண்டுமா, இல்லாததும் பொல்லாததும் கூற வேண்டுமா, பெண்டு பிள்ளைகளைக்கூடக் கேவலப் படுத்திப் பேசவேண்டுமா, அவர்களின் நிலை நினைப்பு, நட்பு நடப்பு, இவைகளைக் கேவலப்படுத்திக் காட்ட வேண்டுமா! தாராளமாகச் செய்யலாம்! ஒரு 'பயல்' கிட்டே நெருங்கமாட்டான்! வழக்குப் போடுவார்கள் என்ற பயமும்வேண்டாம்—அந்தப் பயல்களாவது வழக்குப் போடுவதாவது!

எதிர்க்கட்சியினரின் கொடிகளை இறக்கலாம், பணிமனைகளை இடிக்கலாம், குடிசைகளைக் கொளுத்தலாம், இழுத்துப்போட்டுத் தாக்கலாம்—போலீசைக் கூப்பிடுவார்களே என்ற பயமே வேண்டாம். போலீஸ் யாருடையது? சர்க்காருடையது! சர்க்கார் யாருடையது? காங்கிரசுடையது! காங்கிரஸ் யாருடையது? உங்களுடையது! பிறகு பயம் என்ன? வீரம் பேசிக் காட்டிடுவீர்! விலைபோகும், நல்லவிலை!!

இதழ் நடத்துங்கள், சர்க்கார் விளம்பரம் குவியும்! பணம்!! படிப்பவர்கள்கொடுப்பது என்ன! அது பிச்சைக் காசு! சர்க்கார் விளம்பரம் என்றால் சொளை சொளையாகப் பணம்!

விவசாயக் கடன் பெறலாம் எளிதாக, கட்டடத்துக்கான கடன் கிடைக்கும், கூட்டுறவுத் துறையில் கொலுவிருக்கலாம், சிறு தொழில் வளர்ச்சியில் ஈடுபடலாம், கடன் கிடைக்கும்,—ஆமாம்! பஸ் ரூட்!! மறந்துவிடலாமா, கேள், கொடுக்கப்படும்! எல்லாம், காங்கிரசில் சேர்ந்தால் கிடைக்கும்.

இந்த விவரத்தை நாம் சேரச் செல்பவர்களில் ஆசை மேலிட்டவர்களுக்கு விளக்கத் தேவையில்லை—அறிந்தே சேருகிறார்கள்; சிலர் சேர்ந்தபிறகு அதனை அறிந்துகொள்வார்கள்.

இவ்வளவும் இதற்குமேலும் 'சுகானுபவ'த்துக்கு வழிசெய்து கொடுக்கத்தக்கது ஆளுங்கட்சி! தெரியாமலா முந்திராவும் சிராஜுதீனும் ஆளுங்கட்சியான காங்கிரசுக்குத் தம்மாலான 'தொண்டு' செய்தார்கள்! தெரியாமலா சீமான்களும் வணிகக் கோமான்களும், ஆலை அரசர்களும் நிலப் பிரபுக்களும், காங்கிரசில் இருக்கிறார்கள்! எந்த அளவு செல்லலாம் என்பதற்குக் கெய்ரான் இருக்கிறார் பாடம் புகட்ட; அவர்போல் சிக்கிக்கொள்ளாதிருக்க முன்னேற்பாடு என்னென்ன செய்துகொள்ளவேண்டும் என்பதிலே மட்டும் சற்று விழிப்பாக இருந்துவிட்டால் போதும்!

பதினேழு ஆண்டுகளாக ஆட்சி நடத்துவதும், இனியும் ஆட்சி நடத்துவேன் என்று இறுமாந்து கூறுவதும், தவறி கேரளத்தில் கம்யூனிஸ்டுகட்சி ஆட்சிக்கு வந்ததுபோல ஏதாவது கட்சி ஆட்சிக்கு வந்துவிடுமானால், அதனைக் கவிழ்க்கத் தயங்காததுமான, காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து பரிசுபெற, கசக்குமா; குமட்டுமா!!

தாராளமாகச் சேருகிறார்கள், ஏராளமாகச் சேருகிறார்கள் என்றால், இதிலே வியப்பு என்ன இருக்கிறது; பாராட்ட என்ன காரணம் காணமுடியும்.

உப்புச் சத்தியாக்கிரகத்தின்போது, தமது கலெக்டர் வேலையை உதறித் தள்ளிவிட்டு காங்கிரசில் சேர்ந்தார்!

தண்டிக்கு மகாத்மா யாத்திரை கிளம்பியதும், தன் சொத்து முழுவதையும் ஏழைக்குக் கொடுத்துவிட்டு, மூவாயிரம் ரூபாய் சம்பளம் பெற்றுக்கொண்டிருந்த அதிகாரி காங்கிரசில் சேர்ந்தார்.

அடக்குமுறைக் கொடுமையை சர்க்கார் அவிழ்த்துவிடத் துணிந்ததுகண்டு அது தேசத்துரோகம் என்று உணர்ந்து, உயர்ந்தர போலீஸ் அதிகாரி தமது பதவியை விட்டுவிட்டார்!

இப்படிப்பட்ட வியப்புக்குரிய போற்றுதலுக்குரிய வணக்கத்துக்குரிய, நிகழ்ச்சிகளைக் கண்டது நாடு. காங்கிரசின் வரலாற்றுச் சுவடியிலே, பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ளது.

அந்த நாட்களில், காங்கிரசில் சேருவது என்பது, நாட்டுப்பற்று, தீரம், தியாகம், என்பவைகளுக்கு எடுத்துக்காட்டு.

அவ்விதம் சேர்ந்து தொண்டாற்றியவர்களிலே மறைந்தவர்கள்போக, சிலர் இன்னும் இருக்கின்றனர்—அவர்கட்கு நாம் வணக்கம் கூறுகிறோம்.

இந்த நாட்களில், எந்தவிதமான சுவைப்பண்டத்தையும் அளித்திடத்தக்க நிலையில், ஆளுங்கட்சியாகக் காங்கிரஸ் ஆகி இருக்கும்போது, காங்கிரசிலே சேர்ந்துகொள்வதிலே, வியப்புக்கோ, பாராட்டுதலுக்கோ என்ன இருக்கிறது என்று மக்கள் எண்ணமிலரார்.

அடுத்த தேர்தலில் காங்கிரசை வீழ்த்தும் அளவுக்கு ஒரு கட்சி ஓங்கி வளர்ந்து, இப்போதே, ஆட்சி மன்றத்தில் காங்கிரசுக்கு 200-இடங்கள் என்றால் அந்தக் கட்சிக்கு 180-இடங்கள் என்ற நிலை இருந்து, அந்தக் கட்சியின் வளர்ச்சிக்காக ஆறு ஆங்கில நாளிதழ்கள், எட்டு தாய்மொழி இதழ்கள், பதினெட்டு வார இதழ்கள், இருபது மாதமலர்கள் உள்ளன என்று கூறத்தக்க தகுதியும்பெற்று இருந்து, திடீரென அந்தக் கட்சிக்கு, செச்சே! என்ன காரியம்செய்ய எண்ணினோம்! காங்கிரசை வீழ்த்தத்திட்டமிட்டோமே! கொடுஞ்செயலல்லவா அது! என்று புது 'ஞானம்' பிறந்து, தனிக்கொடி வேண்டேன், படை வேண்டேன், கொள்கை வேண்டேன்! இதோ கட்சியைக் கலைத்துவிட்டேன், காங்கிரசில் சேருகிறேன், காங்கிரசுக்கு எந்த ஆபத்தும் வராதபடி பாதுகாப்பளிப்பேன், அதன் பக்கம் நின்று போராடி பகைவர்களை முறியடிப்பேன் என்று கூறி, காங்கிரசில் அந்தக்கட்சி சேர்ந்துவிடுகிறது என்றால் உள்ளபடி அது வியப்புக்குரியதாகும்; அந்தக் கட்சியினரின் தன்னல மறுப்பை, ஒன்றுபட்டிருக்கவேண்டும் என்ற உணர்வை எத்தனை பாராட்டினாலும் தகும்!

நெஞ்சில் கைவைத்து, நேர்மையில் நம்பிக்கை வைத்துக்கூறட்டும், எவரேனும், இன்று காங்கிரசிலே சேருவதாக முடிவெடுத்துள்ள கட்சிகளில், ஏதாவது ஒன்று, காங்கிரசை வீழ்த்தத்தக்க அளவுக்கு, அரசாளும் பொறுப்பை ஏற்கத்தக்க அளவுக்கு, வளர்ச்சியும் தகுதியும், திறமையும் வாய்ப்பும் பெற்றுளதா! எவரும் 'ஆம்' எனக் கூறத் துணியார்!! அங்ஙனமாயின், அத்தகைய கட்சிகள் காங்கிரசிலே சேர்ந்துவிடுவதாலே, வியப்படைய, பாராட்ட, வாழ்த்தி வரவேற்க, காரணம் என்ன இருக்கிறது!!

> கே. வி. நாராயண ரெட்டியார் என்பவரைத் தலைவராகக் கொண்டு ஆந்திரத்தில இயங்கி வரும், ஐக்கியமுன்னணிக் கட்சி, கட்சி அடிப்படையில் காங்கிரசில் சேரத் திட்டமிட்டிருக்கிறது.

இந்தத் திங்கள் இருபதாம்நாள் வெளிவருகிறது இப்படி ஒரு செய்தி ஹைதராபாத்திலிருந்து.

இந்தக் கட்சியையே எடுத்துக்கொண்டு பார்ப்போம், நிலைமையை.

முதலில் இது ஒரு தனிக்கட்சி அல்ல; சுயேச்சைகள்—முன்னாள் காங்கிரசார்—புத்தம்புதுக் கட்சியினர் என்பவர்களின் 'ஐக்கியமுன்னணி'!

இந்த முன்னணியில் இப்போது உள்ள சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை, ஆந்திர முதலமைச்சர் பிரம்மானந்த ரெட்டியாருக்குப் பீதி உண்டாக்கத்தக்கதாகவும், சஞ்சீவி ரெட்டியாருக்குச் சஞ்சலம் தரத்தக்கதாகவும் இருக்கிறதோ என்று எவரும் ஐயம்கொள்ள வேண்டாண்டாம் — மொத்த எண்ணிக்கை 29.

இந்தக் கட்சி, காங்கிரசில் சேர்ந்துவிடுகிறதாம்! என்ன பொருள் இதற்கு! தனியாகக் காங்கிரசை எதிர்த்துநிற்கும் துணிவு இல்லை, வாய்ப்பு இல்லை, வசதி இல்லை, ஆகவே விருப்பம் இல்லை!

இந்தக் கட்சி காங்கிரசில் சேர்ந்துவிடுவதால், காங்கிரசுக்கு என்ன இலாபம்—புதிய பலம்—எந்த ஆபத்தை இந்தக்கட்சி தடுத்திடும் ஆற்றல் பெற்றது? அதுவும் இல்லை.

இதழ்கள் 'திருநாள்' என்று கொண்டாடி வரவேற்பது, இத்தகையோரின் காங்கிரஸ்நுழைவை!! பொருள்—பொருத்தம் ஏதேனும் இருக்கிறதா?

பிரஜாசோஷியலிஸ்டு கட்சியிலே ஒரு 'பிரிவு!—அசோக்மேதா உட்பட—காங்கிரசில் சேர்ந்துவிட்டதாம்!

பிரஜா—சோஷியலிஸ்டுகள் என்ன சொல்கிறார்கள் என்பதே புரியவில்லை; அவர்களுக்காவது புரிகிறதா என்பதே சந்தேகம் என்று இந்தக் கட்சியைப் பற்றி ஒருமுறை பண்டித நேரு அவர்கள் கூறியிருக்கிறார். நாளுக்கு நாள் நகர்ந்ததடி அமாவாசை என்பது போல், இந்தக் கட்சி, தேர்தலுக்குத் தேர்தல் இளைத்து ஈளை கட்டியபடி 'மகோன்னதமாக' வளர்ந்து வந்திருக்கிறது!

இந்தக்கட்சி முழுவதும் கூட அல்ல—ஒரு பிரிவு—காங்கிரசில் சேர்ந்துவிட்டதாம்! சேர்ந்ததால், காங்கிரசிலோ, நாட்டிலோ என்ன குறிப்பிடத்தக்க மாறுதல் ஏற்பட்டுவிட்டது—என்ன ஏற்பட முடியும்!!

இதுபோல ஆராய்ந்து பார்த்தால் உண்மை விளங்கும்,

> காங்கிரசை வீழ்த்தத்தக்க வல்லமை கொண்ட நிலைபெற்ற கட்சி எதுவும் கலைக்கப்படவில்லை; காங்கிரசில் கலந்துவிடவில்லை.
>
> காங்கிரசை எட்டிப் பிடிக்கத்தக்க நிலை கூடப் பெறாது, பெறவும் முடியாது என்ற நிலையில் உள்ள கட்சிகள், ஏன் ஆகாத காரியத்தில் ஈடுபட்டபடி இருக்கவேண்டும் என்ற புத்திசாலித்தனத்துடன், காங்கிரசில் சேர்ந்துவிட்டன.

எல்லோரும் சேர்ந்து காங்கிரசைப் பலப்படுத்த வேண்டும், அதற்கே அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம் என்கிறார்கள் காங்கிரஸ் தலைவர்கள் — ஜனநாயகத்திலும் சமதர்மத்திலும் நம்பிக்கைகொண்டவர்களாக இருக்கவேண்டும் என்பதுதான் நிபந்தனை.

இந்த அழைப்பிலே ஒரு கனிவு மட்டுமல்ல, ஒரு தாபம் இருக்கிறது;

சேற்றிலே இறங்கிவிட்ட பாரவண்டியை மறுபடியும் வெளியேகொண்டுவர, ஆட்களைக் கூவி அழைத்து கெஞ்சுங்குரலில் 'ஒருகை கொடுங்களய்யா!' என்று

(14-ம் பக்கம் பார்க்க)

# தம்பிக்கு - இதயத்தில் பூத்த மலர்

ஒரு சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பு — அதற்கான பேச்சு எழுந்து வளர்ந்துகொண்டு வருகிறபோது — எவ்வளவு வேண்டுமானுலும் அந்தச் சட்டம்வேண்டாம் — கூடாது — தீது என்று வாதாடலாம், மறுத்துரைக்கலாம், எதிர்ப்புச் செய்யலாம், ஆனுல் இவைகளை மீறி ஒரு சட்டம் இயற்றப்பட்டுவிட்டால், பிறகுகூட அதை எதிர்த்துப் பேசி கருத்து வேற்றுமையைக் கூறலாம், ஆனல் மீறுவது மட்டும் கூடாது. மீறுவது சட்டத்துக்கு உட்பட்டு நடக்கும் பாங்கினைச் சமுதாயம் கொண்டு ஒழுகவேண்டும் என்று உள்ள நிலையைக் கெடுத்துவிடும், அது கெட்டுப் போய்விட்டால் பிறகு சமூகக் கட்டுக்கோப்பைச் சிதையாதபடி பாதுகாத்து வரும் சக்தி பாழ்பட்டு விடும். அந்தச் சக்தி பாழ்பட்டுவிட்டால் பிறகு நாட்டிலே காட்டுமுறை ஏற்பட்டுவிடும், என்று வாதாடுபவர்கள் இருக்கிருர்கள்.

அதிகாரம் ஊட்டிவிடும் ஆணவத்தின் காரணமாக, பலர் குளறிக்கொட்டியிருப்பதனை மிக மிக நாகரிக நடையுள்ளதாக்கி, அவர்களின் தூற்றலையும் ஒரு தத்துவவிளக்கம் போன்றதாக்கி நான் தந்திருக்கிறேன்—மேலே.

படு! படு! சட்டத்தை மீறினுல் சும்மாவிடுவார்களா!

எதிர்த்தால் பிடித்திழுத்துக் கொண்டுபோய் கொட்டடியில் தள்ளுகிருர்கள்.

பேச்சு என்ன இதுகளிடம்! கூப்பிடு போலீசை! கொண்டுபோகச் சொல்லு சிறைக்கூடம்.

நாங்கள் யார் என்று தெரிந்துகொள்ளாமல், எமக்கு உள்ள அதிகாரம் எப்படிப் பட்டது என்பதை அறிந்துகொள்ளாமல், எங்களையா எதிர்க்கிருய்! என்ன நடக்கும் என்பதைத் தெரிந்துகொள்!

இவ்விதமாகப் பேசுப்வர்கள், சட்டத்தை மீறினுல் சங்கடப்படவேண்டி நேரிடும் என்பதனை எடுத்துக் காட்டுகிருர்கள் என்றே வைத்துக்கொள்வோம். சட்டத்தை மீறும்போது, சட்டத்தின் பாது காவலரின் பிடியில் சிக்குவோம் என்பதும், கொட்டப்படுவோம் என்பதும் எவருக்கும் தெரியும். எனவே அதனை நினைவுபடுத்துவதாகக் கூறிக்கொண்டு நிந்தித்துக்கிடப்போர் தமது நீண்ட நாவினுக்கு அதிக வேலை கொடுதது அலுத்துப்போகத் தேவையில்லை.

சட்டம் சமுதாயக் கட்டுக்கோப்புக்கு இன்றியமையாதது என்ற அரிச்சுவடி போதிக்கத் தேவையில்லை, அதுபற்றிய பொது அறிவு சமூகத்தில் பரவலாக ஏற்பட்டுவிட்டிருக்கும் இந்த நாட்களில்.

சட்டத்தைக் குறித்த தன்மைகளை எந்த அளவுக்கு அறிந்திருக்கிறேன் என்பதை எடுத்துக் காட்ட அல்ல, என்னை நிந்திக்கும்போதுகூட, பொதுத் தத்துவவிளக்கத்தை உள்ளடக்கிப் பேசட்டும் என்பதற்காகவும், அவர்கள் எத்தனை இழிமொழி பேசி தமது இயல்பினையும், தம்மிடம் உள்ள சரக்கின் தன்மையினையும் எடுத்துக்காட்டியபடி இருந்தாலும், சேற்றுக் குட்டையிலிருந்தும சில



வான். ஆனுல் சட்டத்திற்குத் தன்னைத்தானே உட்படுத்திக்கொண்ட சமுதாய அமைப்புமுறை இருக்கிற காரணத்தால், அந்தவலிவற்றவனுக்குத்துணையாக சமுதாயமே நிற்கிறது; ஒருவன் எத்துணை வலிவுமிக்கவனுக இருப்பினும், அவனுடைய வலிவு சமுதாயத்தின் கூட்டுவலிவின் முன்பு எம்மாத்திரம்! எனவே அவன், தன் வலிவினைக்காட்டிட இயலாது! அவன் செய்த கொடுமைக்கேற்ற தண்டனைதரப்படுகிறது கொடுமை செய்தவன், தன் சொந்த வலிவினைக்காட்டித் தப்பித்துக்கொள்ள முடியாது போகிறது.

எனவே, சட்டம், வலியோர் சிலர் எளியோர் தமை வதைபுரியும் கொடுமையைத் தடுத்திடும், வலிவுமிக்க ஓர் ஏற்பாடாக விளங்கிவருகிறது.

இவ்வளவும், இதற்குமேலும் கூறலாம், சட்டத்தின் பொருள், பொறுப்பு, பொருத்தம் ஆகியவைபற்றி!

இவைகளை உள்ளடக்கித்தான், சட்டம் ஆள்கிறது! என்று கூறுகிருர்கள். சட்டம், தனிப்பட்ட எவரையும்விட, வலிவுமிக்கது, எவர்சார்பிலும் நின்றுவிடாமல், வலியோர் எளியோரை வதைக்காதபடி பார்த்துக்கொள்கிறது, என்று கூறுகிருர்கள்.

சட்டத்துக்கு அடங்கி நடப்பது—கேவலப்போக்கு என்ருே, கோழைத்தனம் என்ருே, கூறுபவர் எவருமிரார்; ஏனெனில் சட்டம் ஒரு சமுதாய ஏற்பாடு, எனவே அத்தச் சமுதாயத்திலே உள்ள ஒவ்வொரு தனிமனிதருக்கும் தன்னுடைய இசைவின்பேரில் அமைந்துள்ள ஏற்பாடே, சட்டம் என்று கூறிக்கொள்ள, பெருமைப்பட, உரிமை இருக்கிறது. சட்டத்திற்கு உட்பட்டு நடப்பது என்பது, தானும் சேர்ந்து சமைத்துக்கொண்டுள்ள ஒரு சமுதாய ஏற்பாட்டுக்கு, சமுதாய நலனைக்கருதி, உடன்பட்டு ஒழுகி வருவது என்ற பொருள் தருவதால், அது தவறு ஆகாது என்பது மட்டுமல்லாமல், அது தலையாய கடமை என்ற எண்ணம் எழுகிறது.

சட்டம் அவ்விதம்; நாம் என்ன செய்யலாம்!

சட்டத்திற்கு மாருக நான் ஏதும் செய்வதற்கு இல்லை.

என்று கூறிடுவோர், ஒரு குறிப்பிட்ட பிரச்சினையில், அல்லது ஒரு குறிப்பிட்ட நடவடிக்கையில், தமது விருப்பு வெறுப்பு எப்படி இருப்பினும், அந்த விருப்பு வெறுப்பைக் கட்டுப்படுத்திக்கொண்டேனும், சமுதாய ஏற்பாட்டுக்கு ஒத்தபடி தான், நடந்துகொள்ளவேண்டும் என்பதைத் தான் தெரிவிக்கிருர்கள்.

* * *

நாம் என்ன செய்யலாம் **சட்டம்** அப்படி!

இப்படியும் ஒரு **சட்டமா?**

இதற்கும் **சட்டம்** வந்துவிட்டது!

எடுத்ததற்கெல்லாம் **சட்டமா?**

**சட்டம்** என்றாலும் அதிலே பொறுத்தம் பொருள் இருக்கவேண்டாமா?

ஆரஅமர யோசிச்சி **சட்டம்** போடணும்.

இவருடைய **சட்டமப்பா** இது!

எத்தனையோ **சட்டத்திலே** இது ஒன்று.

ஏன், போட்டுவிடேன் **சட்டம்** இதற்கும்!

**சட்டம்** போடுவதா பெரிய கஷ்டம்!

அவருக்கென்ன நினைத்தா போடுவாரு ஒரு **சட்டம்!**

**சட்டம்** வருகிறதாம்பா! தெரிந்துகொள்!

**சட்டம்** போடப்போருராமே பெரிய சட்ட நிபுணரு!

**சட்டம்** போட இவனுக்கு என்ன தகுதி இருக்குது!

புரிந்துகொண்டா போடருங்க **சட்டப்!**

யாரைக் கேட்டுப் போட்டாங்க இந்த **சட்டம்!**

இவனேட **சட்டத்தை** எவன் மதித்து நடப்பான்?

இதுக்கும் பேரு **சட்டந்தானும்!**

இந்தச் **சட்டம்** நிலைக்குமா!

இவனேடு தீர்ந்தது இந்தச் **சட்டம்!**

**சட்டம்** போட்டுவிட்டா பிரச்சினை தீர்ந்து போச்சா!

எத்தனையோ **சட்டத்தைப்** பார்த்தாச்சி; விட்டுத் தள்ளு!

இந்தச் **சட்டம்** தொலையணும் நாடு உருப்பட வேணும்!

இங்கேதான்யா இப்படிப்பட்ட **சட்டமெல்லாம்!**

இப்படிப்பட்ட **சட்டம்** போட்டவனெல்லாம் என்ன ஆளுன்னு தெரியாதா!

நியாயந்தானுய்யா இந்தச் **சட்டம்!**

கொஞ்சமாவது ஈவு இரக்கமிருந்தா இப்படி ஒரு **சட்டம்** போடுவானு!

யார் என்ன செய்ய முடியும் என்கிற ஆணவத்திலே போடற **சட்டம்!**

**சட்டம்** போட்டுவிட்டா எல்லோரும் பெட்டிப் பாம்பாகிவிடுவாங்கன்னு நினைப்பு!

கண்ணுமண்ணு தெரியாம கொண்டாடினேம்; போடருன் **சட்டப்!**

**சட்டத்தைத்தானே** காட்டுகிறே! காட்டு!

**சட்டப்படி**தானே நடக்குது சகலமும்! தெரியுமே!

ஆட்டுக்குப் போடுது **சட்டம்** ஓனாய்கூட்டம்!

வலுத்தவன்கிட்ட பேசுதா இந்தச் **சட்டப்!**

ஏழை வாழவா இருக்குது இந்தச் **சட்டம்!**

இல்லாதவனை மிரட்டத்தான்யா **சட்டம்!**

நல்லதுக்குப் போடமாட்டாங்க ஒரு சட்டம்!

சட்டம் ஒழுங்காகத்தான் இருக்குது! இருந்து?

சட்டம் இருக்குதா? ஆமாம்! ஏட்டிலேதானே!!

ஏன்யா, சட்டம் சட்டம்னு பேசி வயற்றெரிச்சலைக் கிளப்பறே!

போய்யா, நீயும் உன்னுடைய சட்டமும்.

என்னய்யா செய்துவிடும் உன்னுடைய சட்டம்?

ஆமாம்! மீறப்போறேன் உன் சட்டத்தை! செய்ய முடிந்ததை செய்துகொள்ளு, போ!

சட்டம் சட்டம்னு பயந்து சாகச்சொல்றயா?

உயிரைத்தானேய்யா பறிச்சிக்கும்உன் சட்டம்! செய்யட்டும்!!

கிளம்புங்க, நமக்காகச் சட்டமா சட்டத்துக்காக நாமா என்பதை ஒருகை பார்த்தேவிடுவோம்!

* * *

தம்பி! முற்பகுதியில், சட்டத்தின் மேம்பாடுபற்றிக் கூறியிருப்பதற்கும், பிற்பகுதியில், சட்டத்தைத் துச்சமென்று கருதும் மனப்போக்கு எழத்தக்கவிதமாக எழுதியிருப்பதற்கும் பொருத்தம் காணுமே—சட்டம் ஒரு சமுதாய ஏற்பாடு என்பதற்கான அழுத்தமான காரணங்களைக் காட்டிவிட்டு, சட்டத்தை கேலிசெய்தும் கேவலப்படுத்தியும், மீறத்தக்கது ஒழித்திடவேண்டியது என்ற முறையிலும் எழுதியிருப்பது முறையாகத் தெரியவில்லையே என்று எவருக்கும் கேட்கத்தோன்றும்.

பொருத்தமற்றதை, முறையற்றதை எழுதும் பழக்கம் எனக்கு இல்லை என்பதை நீ நன்கு அறிந்திருக்கிறாய்—எனவே ஏன் நான் இவ்விதம் எழுதினேன் என்று எண்ணிப்பார்த்தால், உண்மை விளங்கும்.

சட்டம், சமுதாய ஏற்பாடாக, கட்டுக்கோப்பு, கண்ணியம் ஒழுங்கு நீதி நியாயம், நேர்மை ஆகியவற்றினைப் பாதுகாத்திடத்தக்கதாக அறநெறி மேற்கொள்வதாக அமைந்திருக்குமானால், அப்படிப்பட்ட சட்டத்தை அனைவரும் வரவேற்று போற்றி அதன் கட்டுக்கு அடங்கி சமூக மேம்பாடு எழில்பெற ஒழுகவேண்டும்—ஒழுகிவருகின்றனர் மிகமிகப் பெரும்பாலோர். ஆனால் சட்டம், தான்தோன்றித்தனமாக, ஆணவப் போக்குடன், ஆய்ந்து பார்க்காமல், ஆதிக்க வெறிகொண்டு, அக்கிரமத்துக்குத் துணையாக, அநீதியைக் கொலுவேற்ற இயற்றப்படுமானால், சட்டம் மதிப்பற்றுப்போகும், துச்சமென்று எண்ணுவர், எதிர்த்திட முனைவர்—எதிர்த்துள்ளனர்—எதிர்த்து நிற்பர்.

சட்டம் நோய் தீர்க்கும் மருந்து என்று கொள்வோமானால், அம்மருந்து முறைப்படி செய்யப்பட்டதாக, அத்துறை வல்லுநரின் ஒப்பம்பெற்றதாக, நோய்தீர்க்க வல்லதாக அமைந்திருக்கவேண்டும். அங்ஙனம் தயாரிக்கப்பட்டதாக இருப்பின் கசப்பு, குமட்டல், எரிச்சல் ஏற்படினும் சகித்துக்கொண்டு, நோய்போக அம்மருந்து உட்கொள்வர். பொருள்வகை, செய்முறை, அறியாது, கண்மூடித்தனமாக, விளக்கமற்ற நிலையில் விரைவு அதிகம்காட்டி, தயாரித்த மருந்து எனின் அதனை உட்கொள்ளார் — உட்கொள்பவர்க்கு நோயினும் கேடான நிலையே ஏற்பட்டுவிடும்.

சட்டத்தை மீறலாம் என்ற நினைப்பும், மீறவேண்டும் என்ற துடிப்பும், மீறத்தக்க துணிவும் மக்கள்—அல்லது குறிப்பிடத்தக்க பகுதியினர் கொள்ளத்தக்கவிதமான கோணற் சட்டத்தை இயற்றிவிட்டு, சட்டம் ஒரு சமுதாய ஏற்பாடு, அதனை மீறலாகாது என்று பேசிப் பயன் இல்லை.

அவ்விதம் செய்யப்பட்ட சட்டங்கள் நிலைத்திருப்பதுமில்லை.

எனவேதான், சமூகத்தில், விவரம் அறியாமல், விளக்கம் பெருமல், ஆர அமர யோசியாமல், தீது பயக்கத்தக்க, தன்மானம் அழிக்கத்தக்க, உரிமையை உருக்குலையச் செய்யத்தக்க, வலியோர்க்குந் துணைநிற்கத்தக்கவிதமான சட்டங்களை எதிர்த்து நிற்கும் நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன—நடைபெற்றுக் கொண்டு வருகின்றன; நடைபெற்றுத்தீரும்.

சட்டம் இயற்றுவது என்பது எத்தனை பொறுப்பான காரியம் என்பதை உணர்ந்து, தூய நோக்கத்துடன் இயற்றிடவேண்டும்.

சட்டம் இயற்றும் அதிகாரம் எம்மிடம் சிக்கிவிட்டது, இனி எமது விருப்பத்தின்படி சட்டங்களை இயற்றுவோம் என்ற போக்கு அறவே கூடாது. அதனைச் சமூகம் தாங்கிக்கொள்ளாது.

தேவை அறிந்து, சூழ்நிலை தெரிந்து, அனுபவ அறிவையும் அறிவாளர் கருத்தையும் பெற்று, மக்களுக்குப் பெரும்பாதகம் விளைவிக்காதவிதமான முறை கண்டறிந்து, சட்டங்கள் இயற்றப்படவேண்டும்; அத்தகைய சட்டங்களை மதித்து நடப்பர்—நடந்துகொள்கின்றனர்.

கனிதரும் மரமாகத்தக்க செடி, தோட்டத்தில் பயிரிடுபவர்களே, அந்தச்செடி, வீட்டுச் சுவரின் இடுக்கிலே தன்னாலே முளைத்துவிட்டால், கல்லி எடுக்கிறார்கள், வேரினைக் கருக்கிடவும் செய்கிறார்கள்.

மக்களின் நல்வாழ்வுக்காக இந்தச் சட்டம் பிறந்திருக்கிறது என்ற நம்பிக்கை எழத்தக்க முறையில் சட்டம் இயற்றவேண்டும்—மீறினால் என்ன ஆகுமோ என்ற கிலி மக்கள் மனதிலே எழும், ஆகவே அவர்கள் தண்டனைக்குப் பயந்து அடங்கிக்கிடப்பர் என்று மட்டும் எண்ணிக்கொண்டு, சட்டத்தை இயற்றிவிடுவது, முழு அளவு பலனை நிச்சயம் தாராது. இதை விளக்கிடும் நிகழ்ச்சிகள் வரலாற்று ஏடுகளிலே நிரம்ப இருக்கின்றன.

சட்டத்தை மீறலாமா என்று கேட்கிறார்களே சிலர் அவர்களுக்குக் கூறிடத் தயங்காதே, தம்பி! தேவையான, நியாயமான சட்டங்களை நாங்கள் மதிக்கிறோம், சட்டத்தின் கட்டுக்கு அடங்கி நடந்துகொள்கிறோம், ஆனால் எம்மை இழி மக்களாக்கிவிடத்தக்க கேடுவிளைவிக்கும் சட்டம் இயற்றப்பட்டால், அதனை மதித்திட முடியாது, மீறித்தான் நடப்போம், அதற்காக அளிக்கப்படும் தண்டனையை இன்முகத்துடன் ஏற்றுக்கொள்வோம் என்பதனை–தெளிவாக–திட்டவட்டமாக என்று.

எல்லாச் சட்டத்திலும் மேலானது; உயிரானது, புனிதமானது, அரசியல் அமைப்புச் சட்டம் என்கிறார்கள்.

அதனைவிட மேலானது, புனிதமானது, நல்வாழ்வுக்கான மக்களின் அடிப்படை உரிமை.

அந்த உரிமையைப் பறித்திடும் சூதுமதியுடன், சூழ்ச்சித் திறத்துடன், ஒரு ஏற்பாடு செய்துகொண்டு, அதற்குச் சட்டத்தைக் கருவியாக்கிக்கொண்டால், அந்தச் சட்டத்தை எப்படி மதித்திடமுடியும், எவர் மதிப்பர், ஏன் மதித்திடவேண்டும்.

இந்த எண்ணத்துடனேயே, இந்த எண்ணம் தரும் தெளிவையும் துணிவையும் துணைகொண்டே, இந்தி எதிர்ப்பு அறப்போர் நடாத்தப்பட்டு வருகிறது. இது சட்டத்தை மீறுவதாகும் என்கிறார்கள் துரைத்தனத்தில் இடம்பிடித்துக்கொண்டவர்கள்; அல்ல! அல்ல! எத்தகைய தீதான, தேவையற்ற, சட்டத்தை இந்தத்துரைத்தனம் எம்மைச் சுமக்கச்சொல்கிறது பாருங்கள் என்று உலகோர்க்கு உணர்த்த நடத்தப்படும் அறப்போர் இது என்கிறோம், நாம்,

தம்பி! சட்டம் பொறுத்தம் பொருள் அற்றதாகவும், உரிமைக்குக்கேடு விளைவிப்பதாகவும் இருந்திடும்போது, மக்கள் சட்டம்பற்றி என்னென்ன பேசிக்கொள்வார்கள் என்பது குறித்து நான் குறிப்பிட்டுள்ள பகுதியை மறுபடியும் ஒருமுறை படித்துப்பார். ஒவ்வொரு பேச்சும் ஒரு மனநிலையைக் காட்டிடும்.

நாம் என்ன செய்யலாம், சட்டம் அப்படி! — என்ற பேச்சிலே, ஒரு ஏக்கம் தொனிக்கிறதல்லவா? இந்த ஏற்பாடு கெடுதல் மூட்டுகிறது, தெரிகிறது; ஆனாலும், சட்டம் இதுபோலச் செய்துவிட்டார்களே. என்ன செய்வது என்ற ஏக்கம்.

இப்படியும் ஒரு சட்டமா? கோபமும் வெறுப்பும் கலந்திருக்கிறது, இந்தக் கேள்வியில்.

இதற்கும் சட்டம் வந்துவிட்டதா? என்று கேட்கும்போதும், எடுத்ததற்கெல்லாம் சட்டமா? என்று வினவிடும்போதும், ஒரு துரைத்தனம் கண்டதற்கெல்லாம் சட்டம் போட்டு, மக்களை அதிக அளவுக்குக் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறது, அந்தத் துரைத்தனத்துக்கு 'அமுல்' செய்வதிலேயே அளவற்ற சுவை இருக்கிறது என்ற கருத்து கலந்து வெளிவருகிறது.

பொருளும் பொறுத்தமும் அற்ற முறையிலே சட்டம் இயற்றும்போது, மக்கள் வெறுப்படைந்து பேசுகிறார்கள், சட்டம் என்றால் அதிலே பொருத்தம் பொருள் இருக்கவேண்டாமா என்று.

ஆர அமர யோசித்துச் சட்டம் போடவேண்டும் என்ற பேச்சு எப்போது எழுகிறது! ஒருபலன் கிடைக்கும் என்று எதிர்பார்த்து எடுத்துரைத்து சட்டம் இயற்ற, நேர்மாறானது விளைவது காணும்போது, இப்பேச்சு எழுகிறது,

இவருடைய சட்டமப்பா இது!—என்று கூறும்போது, சட்டம் இயற்றுபவர்கள் மீது தமக்குள்ள அலட்சியத்தை வெளியிடுகிறார்கள், ஆணவக்காரன் அல்லது அசடன் இவன் சட்டம் இதுபோலத்தான் இருக்கும் என்ற பொருள்பட.

எத்தனையோ சட்டத்திலே இது ஒன்று. அடுக்கடுக்காகச் சட்டங்களைக் குவித்துவைத்திருக்கிறார்கள், தேவையற்று, என்பதைக் குறிக்க இதுபோலக் கூறுகிறார்கள்.

ஏன், போட்டுவிடேன் சட்டம் இதற்கும்! — என்று கேட்பவர், அதிகாரத்திலிருப்பவர், எந்த நியாயம் கேட்டாலும் உரிமை கேட்டாலும் அதை அடக்கிட சட்டத்தைக் கருவியாக்கிக்கொள்கிறார் என்பதைச் சுட்டிக் காட்டுகிறார். அத்துடன், அதிகாரத்திலிருப்பவரிடம் மதிப்பு மங்கி வருகிறது என்பதையும் காட்டுகிறார்.

தம்பி, இப்படியே விளக்கம்பெற, ஒவ்வொரு பேச்சையும் படித்துப் படித்துக் கருத்தினை ஆராய்ந்தால், திகைப்பு, வியப்பு, ஏக்கம், வெறுப்பு, அலட்சியம், கோபம், எதிர்ப்பு, துணிவு எனும் ஒவ்வோர் வகையான உணர்ச்சியும் இந்தப் பேச்சுக்களிலே உள்ளடங்கி இருப்பதை அறிந்துகொள்ளலாம்.

பொறுத்துப் பார்த்துப் பார்த்து, முறையிட்டால் மாற்றப்படும் என்று எதிர்பார்த்து ஏமாற்றமடைந்து, எரிச்சல் மூட்டப்பட்டு இறுதியில் என்ன நடந்தாலும் நடக்கட்டும் எதிர்த்தே தீருவது என்ற துணிவு பிறந்து, அந்தக் கட்டத்தின்போதுதான்,

**தலையா போகும் மீறத்தான் போகிறேன்**
**மீறுவோம் கிளம்புங்கள்**

என்பன போன்ற பேச்சுகள் எழுகின்றன; செயலும் நிகழ்கிறது.

இந்த நிலைக்கு மக்களைத் துரத்தக்கூடியதாக, சட்டம் இயற்றக்கூடாது.

இந்த நெறியை ஆட்சியினர் மறந்து, கண்மூடித்தனமாகச் சட்டம் இயற்றினால், அந்தச் சட்டம் ஏட்டில் இருக்கும், நாட்டிலுள்ள நல்லோர் துணிந்து அதனை மதிக்க மறுப்பர்.

நாம் நடத்திவரும் இந்தி எதிர்ப்பு அறப்போர் இந்த நிலையையே எடுத்துக் காட்டுகிறது; எனவே சட்டம் ஒரு சமுதாய ஏற்பாடு என்ற மேலான கோட்பாட்டை மதித்து ஒழுகும் நமது கழகத்தவர், ஆகாத, தீதான. தேவையற்ற, பொருளற்ற, வேண்டுமென்றே பூட்டப்படுகிற, உரிமை பறிக்கிற சட்டத்தை எதிர்த்துச் சிறை செல்வதை, ஒரு தீமையை எதிர்த்து நிற்கும் அறம் என்று உளமார நம்பி நடந்துகொள்கிறார்கள். அந்தச் சீரிய செயல். சட்டம் இயற்றுபவர்கள், எத்தகைய நெறி நிற்கவேண்டும் என்பதனை அவர்களே, மெல்லமெல்ல ஆனால் நிச்சயமாக உணர்ந்திட வழி ஏற்படுத்தும் என்ற நம்பிக்கை கொண்டுள்ளேன்.

இத்தகைய நல்ல நோக்கத்துடன் நடத்தப்படும் அறப்போரில் ஈடுபட்டுச் சிறை சென்றவர்களில் நானும் ஒருவன் என்று சொல்லிக்கொள்வதிலே நான் பெருமைப்படுகிறேன்; அந்தப் பெருமிதத்தில், எனக்கு! எனக்கு! என்று கேட்டுத் தம்பிகள் பங்கு பெற்றுக் கொள்வது எனக்குப் பெருமகிழ்ச்சி தருகிறது. அந்தப் பெருமையில் தமக்குரிய 'பங்கினை'ப் பெற முனைந்து, நாவலர் நெடுஞ்செழியன் சிறை சென்றிருக்கிறார். என் வாழ்த்துக்களை அவருக்கும், கோவை மாவட்டச் செயலாளர் உடுமலை நாராயணன் மற்றும் பல நண்பர்கட்கும் வழங்கி மகிழ்கிறேன். வாழ்த்துகள் மட்டுந்தானா அண்ணா! என்று கேட்டிடமாட்டாய் என்று எண்ணுகிறேன், தம்பி! ஏனெனில் நீ அறிவாய், அன்பு ததும்பும் ஒரு தூய இதயத்திலிருந்து நான் கொய்து அளிப்பது அந்த வாழ்த்து! அந்த மலரின் மணமும் மாண்பும் நீ அறிந்திருக்கிறாய்!!

அண்ணன்,



2-8-64

# அந்திக் கலம்பகம்

நூறு ஆயுசம்மா பொன்னி உனக்கு! இப்பத்தான் உன்னே பத்திப் பேசிக்கொண்டிருந்தேன், பட்டுவோடே...

நீங்களும் அவ்வளவு காலம் வரையிலே என்னேடு இருப்பதாஞ, நூறு வயசுஎனக்கு இருக்கட்டும் ஏமூ!

என்ன சொல்ரு பாருடி... அவ்வளவு காலம் தாங்குமாடி இந்தக் கட்டை...

ஏன், என்ன உங்க உடம்புக்கு... பொன்னி சொல்றபடி, நீங்க அவ்வளவு காலம் இருக்கத்தான் போறிங்க...

பட்டு! உனக்கு ஆசையாக இருக்கலாம், பொன்னி வாழ்த்தலாம் ஆஞ மனஷாளோட காயம் நிச்சயமா.. பார்த்திண்டிருக்கும்போதே பண்டித ஜவகர்லால் மறைந்து விட்டாரே, யார் நினேச்சா இப்படி நடக்கும்னு...உம்! திடுக்கிட்டு தேம்பியது உலகம்னு பேப்பர்லே போட்டிருந்தா

அதனுலே தான் சொல்றேன், ஆயுசு இத்தனே காலம் இருக்கும்னு எவெராலேயும் சொல்ல முடியாதுன்னு...

ஏமு! என்கிட்டவே மறைக்கப் பார்க்கலாமா... போனவாரந்தானே போய் வந்தீங்க ஜோதிடர் வீட்டுக்கு

ஏண்டி பொன்னி! உனக்கென்ன ஏதாவது யக்ஷணிவசியமா! எவ்வளவு இரகசியமா நடந்தாலும் எப்படியோ உன் காதுக்கு மட்டும் எட்டிவிடுது...

யக்ஷணியுமில்லே பட்சணியுமில்லே. அந்த ஜோதிடர் வீட்டிலே வேலே பார்க்கிற அம்மாதான் சொன்ஞ...நீங்க வந்துபோனதை...

பொன்னி! போய் வந்தது என்னமோ உண்மைதான், ஆஞ உன்னேட சொல்றதிலே என்னதப்பு, எனக்கு வரவர ஜோதிடம் மாந்திரீகம் இதிலே எல்லாம் நம்பிக்கை குறைஞ்சுபோச்சி...

கேட்டாயா அதிசயத்தை! உங்களுக்கே நம்பிக்கை குறைந்து விட்டதா! பலே! பலே!

எல்லாம் பட்டு, இந்த பொன்னியோட பேச்சைக் கேட்டு கேட்டுத்தான். அவதான் புட்டுப்புட்டுக் காட்ருளே; என் புத்தியிலே மட்டும் அவசொல்ற பகுத்தறிவு ஏருமலா போகும்...

உங்களுக்கு ஜோதிடத்தைப் பத்தின ஒரு கதை தெரியுமோ...

என்ன கதை! சொல்லு, பொன்னி.

சோதிட சாஸ்திரம் எப்படி உண்டாச்சி என்பதுபத்தின கதை...

அதற்கே ஒரு கதை இருக்கா...

ஆமாம்! கைலாயத்திலே, முருகக் கடவுள் ஒருநாள் உட்கார்ந்து, மள

மாவென்று பூலோகத்திலே உள்ள சகல ஜீவராசிகளைப் பத்திய சகல விஷயமும, எழுதினாராம் ஒரு ஏட்டிலே...

எதெது எப்படி எப்படி நடக்கும் என்கிற விவரம்...?

ஆமாம்! சுக்கிரன் யாருக்கு எப்போது உச்சமா இருப்பான், சனி திசை யாருக்கு எப்படி ஆரம்பமாகும் என்பதிலே இருந்து, எத்தனை வயசு, எத்தனை பிள்ளை குட்டி, எவ்வளவு சொத்து சேரும், என்னென்ன வியாதி வரும்...

அதென்ன பொன்னி! நான் நுழையறதுக்கும் நீ வியாதியைப் பத்திப் பேசறதுக்கும் சரியா இருக்கு. யாருக்கு என்ன வியாதி?

சும்மா இருடி! சுவாரஸ்யமான கட்டத்தைக் கெடுத்துத் தொலைக்காதே.

பொன்னி சோதிட சாஸ்திரத்தைப் பத்தின ஒரு கதை சொல்லிக் கொண்டிருக்கா. சொல்லு, பொன்னி முருகக் கடவுள் சகல ஜீவராசிகளோட ஜாதகத்தையும் எழுதினார்.

எழுதினாரா! அது தெரிந்தும் பிரம்மாவுக்குப் பிரமாதமான கோபம். துக்கம், பயம்.

பிரம்மாவுக்கு ஏன் கோபம் இதனாலே...

கொஞ்சம் புத்தியைத்தான் உபயோகப் படுத்திப்பாரேன்.

வழக்குகளிலே இருக்கிற சிக்கல்களை எல்லாம் அவிழ்க்கிறவளாச்சே ......

போடி போ! பட்டுவிடம் சிக்கலுள்ள வழக்கா வந்து சேருது...

வந்த வழக்கிலே, இவ உண்டாக்கி விடுகிரு, ஆயிரத்தெட்டு சிக்கலை...

அதாவது நான் அத்தனை மண்டு, அப்படித்தானே......நான் ஒன்றும் உடனே கேலிமொழி கேட்டு ஆத்திரப் படப் போறதில்லை...

பொன்னி! பட்டு இருக்கிற இடத்திலே கூட, ஒரு கதையை நிம்மதியா சொல்ல முடியுமா...

படபடபடன்னு எதையாவது பொரிந்து கொட்டியபடி இருப்பாளே...

உன்னோட தம்பி லடாக் பகுதிக்குப் போனதே எதுக்குன்னு தெரியுமா உனக்கு! இவளோட படபடப்பை, தொண தொணப்பைச் சகிக்கமாட்டாமதான்...

மணி! உன் காதுக்கும் என் காதுக்கும், பட்டுவோட பேச்சு படாசு வெடிக்கறதுமாதிரி இருக்குர், அவன் காதுக்கு அதுதானே சங்கீதம்........

போதும் நிறுத்துங்க...நீங்களும் சினிமாவைப் பார்த்துப் பார்த்து இப்படிப் பேசப் பழகிவிட்டிங்க......

பட்டு! நான் தொடரலாமா, இல்லை உன் பேச்சு வளருதா......

பொன்னி கதையைச் சொல்லட்டும்.

பிரம்மாதானே எல்லா ஜீவராசிகளோட தலைவிதியை எழுதுகிறவர் அது பரம இரகசியமில்லையா! அந்த இரகசியத்தை அம்பலப் படுத்தி ஜோதிடம் எழுதி முருகக் கடவுள் பூலோகத்து அனுப்பிவிட்டா பிறகு பிரம்மாவுக்கு என்ன மதிப்பு இருக்கமுடியும்......

ஓ! அந்தக் கோபமா பிரம்மாவுக்கு ...இருக்கும் இருக்கும். சரி. கோபம் வந்த பிரம்மா என்ன செய்தார்?

நேரே ஓடோடிச் சென்றுர் சிவ பெருமானிடம்......

பேஷ்! அப்பீல் செய்கிருர் போல இருக்கு......

வக்கீலம்மா, உன்னோட சட்ட ஞானத்தை முழுவதும் இங்கேயே செலவழித்துவிடாதே, கோர்ட்டுக்காகக் கொஞ்சம் கையிருப்பா வைத்துக்கொள்ளேன்......

நீ தர்ர மருந்துமட்டுமில்லே மணி! உன் பேச்சே கூடத்தான் கசக்கறது, குமட்றது.

பட்டு வக்கீல் பாஷை பேசறது தப்பு இல்லை மணி! தப்புந்தவறுமாப் பேசருளேன்னுதான் கஷ்டமாயிருக்கு. அப்பீல்னு ஒரு கோர்ட்டு முடிந்து மேல்கோர்ட்டுக்குப் போறதுன்னு அர்த்தம்...

அதானே கேட்டேன், பிரம்மா இப்பத்தானே போருர் சிவபெருமானிடம்......

அதுக்குமேலே அப்பீல் கோர்ட் ஏது!

வெவ்வெவ்வே! பெரிய மேதாவிகள் நீங்களெல்லாம்......

இப்ப அவன் இருக்கனும், உன் தம்பி! பட்டு நீ கோபமாக இருக்கும் போது ஒரு தனி அழகு மலருதுன்னு சொல்லுவான்......

இப்படிப் பரிகாசம் பேசிண்டிருந்தா, நான் சொல்றேன், இந்த இடத்தைவிட்டு நான் போயிடுவேன் ஆமாம்......

வேண்டாண்டி கண்ணு! வேண்டாம்...கதையைக் கேளு. சிவபெருமானிடம் போய் பிரம்மா முறையிட, சிவபெருமான் முருகனைக்கண்டு, ஜோதிட ஏட்டை பூலோகத்துக்குத் தரவேண்டாம்னு சொல்ல; முருகன் நான் தரத்தான் போறேன்னு பிடிவாதம் பிடிக்க, ஏட்டை சிவன் பறிக்க, முருகன் அதைத்தடுக்க, இரண்டுபேர் கையிலேயும் சிக்கிய தாலே ஏடு சின்னபின்னமாகி; அதிலே இருந்து சில துண்டுகள் பூலோகத்தில்விழ, அதை வைத்துக் கொண்டுதான் ஜோதிட சாஸ்திரத்தை உண்டாக்கினுர்களாம் இது சோதிட சாஸ்திரம்பற்றி, வைதீகர்களே சொல்லியிருக்கிற கதை.

அதாவது, சோதிட சாஸ்திரம் என்பதே அறைகுறை என்று அர்த்தம், அப்படித்தானே...

வக்கீலம்மா, விளக்கிக்காட்ரு.... ஜோதிடத்தை நம்பக்கூடாது, அது பூலோகத்துக்குக் கிடைக்கிற போதே, சின்னபின்னமாகிவிட்டது. சின்னபின்னமான ஏட்டை வைத்துக்கொண்டு யாரோ எதை எதையோ சோதிடம்னு சொல்லிக் கொண்டிருக்கிரு, அதிலே பொருள் இல்லை, பலன் இல்லை; நம்பறது புத்திசாலிகளுக்கு அழகு இல்லை என்பது கதையிலே இருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டிய பாடம் ......

வேடிக்கையான கதைதாண்டி பொன்னி! ஒருவிதத்திலே பார்த்தா, சரியாத்தான் இருக்குது. ஒரு சோதிடன் பொறுத்தம் சரியா இருக்குதுன்னு சொல்றன், அதே ஜாதகத்தைப் பார்த்து இன்னெரு சோதிடன் ஆகவே ஆகாது, பொறுத்தம் சரியில்லை என்கிருன்......

ஆனலும், ஜாதகம் பார்க்கிற பழக்கத்தைப் பலபேர் விடமாட்டேன் என்கிருர்களே...

கொஞ்சம் கொஞ்சமாகத்தானே போகும். போயிண்டிருக்கு. ஜவார்லாலுக்கு ஜோதிடம் மாந்தரீகம் இதிலே எல்லாம் நம்பிக்கை கிடையாதாம்; பேப்பர்லே பார்த்தேன்...

பார்த்திருப்பீங்களே அதே பேப்பர்லே ஒரு பக்கம் முழுவதும் ராசி பலன் போட்டிருக்குமே...

கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை என்கிற போக்கு...

பேப்பர்காராளுக்கு இருக்கலாமா இந்தப்போக்கு. உலகத்திலே பிறக்கிற நல்ல அறிவை எல்லாம் திரட்டித்தந்து மக்களுக்கு தெளிவு உண்டாக்க வேண்டிய பத்திரிகைகள், பஞ்சாங்க வேலையைப் பார்க்கிறதா —சே!

எனக்கு மட்டும் ஒரு சான்ஸ் கிடைச்சுதானா, ஜோதிடம் என்பது நம்பிக்கைத் துரோகம்னு சொல்லி ஒரு பெரிய வழக்கு நடத்தி, ஜெயித்துக் காட்டுவேன்.

உனக்கிருக்கு தைரியம். தைரியமா உன்னை நம்பி வரவேணுமே கட்சிக்காரன் எவனாவது...

இப்படியே பேசிக்கொண்டிருங்க, ஒரு மூணு வருஷம் போகட்டும், அப்போது தெரியறது பட்டுவோட சாமர்த்தியம்...

மூன்று வருஷத்துக்குப் பிறகு அதிர்ஷ்டதேவை வரும்போல இருக்கு, இவளைத் தேடிண்டு...

மூன்று வருஷமா! இன்னும் மூன்று மாதத்திலே திரும்பி வருகிறானே என் தம்பி! கடிதம் போட்டிருக்கிறானே...

அதைச் சொல்லவே இல்லையே! பொன்னி! இவனுக்குப் பட்டாளத்திலே வேலை இல்லையே...

இல்லை, இல்லை! நிலைமைகளைப் பார்த்து பத்திரிகைகளுக்குச் செய்திகளைச் சேகரித்து அனுப்புகிற வேலைதான்...

ஆனா, அதுக்கு, யுத்த களம் இருக்கிற பக்கம் நடமாடி ஆகணுமே......ஆபத்து நேரிட்டாலும் நேரிடலாம். பயப்படாமல்தான் வேலையைப் பார்க்கணும்...

நிலைமை இப்ப எப்படி இருக்குதுன்னு சொல்றான் தம்பி. இந்த சீனாக்காரன் கல்லுப்பிள்ளையார் போல இருக்கறானே.

நிலைமை இப்ப நமக்குச் சாதகம் தானாம். பாதுகாப்பு மந்திரி சாவன் அமெரிக்கா போய்வந்ததிலே நமக்கு ஆயுத உதவி பொருள் உதவி எல்லாம் தேவையான அளவு கிடைக்க வழி ஏற்பட்டிருக்குது. பயம் இல்லை.

உலகம் பார்த்து, இந்த சீனாக்காரனோட அக்ரமத்தைக் கண்டிக்க வேணும். யாருக்கோ வந்த வினைன்னு நல்லவாளெல்லாம் இருக்கலாமோ...

உலக நாடுகள் பல நம்ம பக்கம் பரிவு காட்டி இருக்குது. ஆனாலும் சீனாக்காரன் தூதுவர்களை அனுப்பி தூபம் போட்டு கலகத்தை மூட்டிக் கொண்டுதான் இருக்கிறான். கண் விழிப்போடுதான் இருக்கவேணும்.

கென்னடி நமக்கு ஒரு பெரிய துணையா இருந்து வந்தார்; நம்மோட போறாத வேளை, பாரேன், படுபாவி ஒருத்தன் அவரைப் படுகொலை செய்து விட்டான்...

அவனை வேறொருவன் கொன்று போட்டு விட்டானாமே...

ஆமாம்! அவனுக்குப் பைத்தியம்னு, வாதாடுகிறார்களாம்... இங்கே ராஜாஜியோட மகளைக் குத்த வந்தவனுக்குப் பைத்தியம்னு சொல்றாளே; அதுபோல...

ஆமாம், ஆமாம், செய்யறதை எல்லாம் செய்துவிட்டு, சித்தப்பிரமை என்று சாக்கு காட்டி தப்பித்துக் கொள்ளப் பார்க்கிற வழக்கம் அமெரிக்காவிலே ரொம்ப அதிகமாம்...

சட்டம், ஏமாந்து விடாது. சகல விஷயத்தையும் சீர்தூக்கிப் பார்த்து அச்சம் தயை தாட்சிணியமின்றி நல்ல தீர்ப்பு அளிக்கும்...

பிடிபட்டவனைச் சட்டம் பார்த்துக்கொள்கிறது. பிடிபடாமலே தப்பித்துக் கொள்பவனை? அதற்கு சட்டம் என்ன செய்யும்!

போலீஸ், சர்க்கார், கண்காணிப்பாக இருந்து சமூக விரோதிகளை இழுத்து வந்து நிறுத்த வேண்டும், சட்டத்தின் முன்பு, காலையிலே பார்த்தேனே, பேப்பரில், இரண்டு போலி வைத்தியர்கள்பேரில் வழக்கு தொடுக்கப்பட்டு, சிறை தண்டனை தரப்பட்டதை.

வைத்தியத் துறையிலே நிறைய போலிகள் மோசடிகள் நடக்கின்றன. மருந்துகளே மோசமாகத் தயாரிக்கப்படுகின்றன...

சர்க்கார் நடத்தும் மருந்து உற்பத்திச் சாலையிலேயே, மோசமான முறை இருக்கிறதாகக் கண்டுபிடித்தார்கள்......

சர்க்காரைச்சொல்லு சர்க்காரை! எதைச் சரியாகச் செய்கிறது, காட்டு பார்ப்போம். காலையிலே பார்த்தேன், வயிறு எரிகிறது, பால்பண்ணை நடத்திய இலட்சணம் ........

என்னது அது, பால் பண்ணை...

மாதவரம் பால் பண்ணை! ஆரம்பத்திலிருந்து நஷ்டமாம். நாம் கொடுக்கும் விலையோ ஏறியபடி இருக்கிறது. பாலோ கலப்படம் என்கிறார்கள். இலாபம் அதிகம் கிடைக்காவிட்டால் போகிறது, நஷ்டமில்லாமலாவது பார்த்துக் கொள்ளக் கூடாதா! இந்த வருஷ நஷ்டம் இருபத்தி ஆறு இலட்ச ரூபாயாம்......

அக்ரமமாக இருக்கே; கேட்பார் இல்லையா?

கேட்கிறா, கணக்குக் கமிட்டியார், 1960-ம் வருஷம் 5-இலட்சம் நஷ்டமாம், அதற்கு அடுத்த வருஷம் 24-இலட்சம் நஷ்டமாம், இப்போது 26-இலட்சம் நஷ்டமாம்.

இதைக் கண்டித்துப் பேசினால் கோபம் கோபமாக வருகிறது காங்கிரசாருக்கு—இது ஜனநாயக சர்க்கார்—இது சமதர்ம சர்க்கார் என்கிறார்கள்.

என்னதான் சொல்லுபட்டு! பொன்னி சொல்வதுபோல, காங்கிரஸ் கட்சியை விட்டால், ஆட்சி நடத்த வேறுகட்சி இல்லை என்று நினைக்கற விதமாக நிலைமை இருப்பதுதான் இத்தனை கஷ்டநஷ்டத்துக்கும் காரணம்.

இது இப்போது புரிந்து என்ன புண்ணியம். தேர்தலின்போது புரிய வேண்டும்.

புரியத்தான் போகிறது. என் தம்பிகூட எழுதி இருக்கிறான், அந்தப்பக்கமெல்லாம் 'கூட ஆட்சி சரியாக இல்லை என்ற கசப்புதானும் ......

கவனம் வந்தது, மனோன்மணி! இரண்டு நாட்களாக, இலேசாக வாய்க் கசப்பு எனக்கு...

நாக்கை நீட்டுங்கள் பார்க்கலாம் ......

சரி, சரி...வாங்களேன் வீட்டுக்கே சென்று, முறையாகப் பரிசோதனை நடத்துவோம்.

ஆமாம், வா ஏமு! எல்லோருமே போய்வருவோம்.

★

4-ம் பக்கத் தொடர்ச்சி

வேண்டிக்கொள்வதுபோல் இருக்கிறது இந்த அழைப்பு.

சீனக்காரன் நுழைந்தபோது, கட்சிச் சச்சரவுகளை ஒருபுறம் ஒதுக்கிவைத்துவிட்டு நாட்டுக்கு எதிரி மூட்டிவிடப்பார்க்கும் ஆபத்தைத் தடுக்க, பகையினை முறியடிக்க, அனைவரும் சர்க்காரின் கரங்களை வலுவுள்ள தாக்குங்கள்! இந்தநேரம், 'நான்' 'எனது' என்ற பேச்சு எழலாகாது, நாம், நாடு, என்ற முழக்கம் எழ வேண்டும் என்றனர்; அது பொறுத்தமான, பொருளுள்ள, தேவையான, ஒப்புக்கொள்ளத்தக்க பேச்சு, அழைப்பு, ஏற்பாடு, திட்டம். திராவிட முன்னேற்றக் கழகம் அந்த அழைப்பினைப் பெற்று, கழகக் கிளர்ச்சிகளை நிறுத்திவைத்து, பகைவனை எதிர்த்து நிற்கும் பணியில் சர்க்காருடன் ஒத்துழைக்கும் உறுதியைத் தெரிவித்தது, சர்க்கார் காங்கிரஸ் கட்சியினால் நடத்தப்பட்டு வருகிறது என்ற போதிலும்.

நாட்டுக்குப் பேராபத்து, நெருக்கடி என்ற நிலை ஏற்படும்போது, கட்சிகள், கட்சி மனப்பான்மையை விட்டுக்கொடுத்து ஆளுங்கட்சியுடன் ஒன்றுபட்டு நிற்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது, ஒப்புக்கொள்ளவும் நியாயம் இருக்கிறது.

இப்போது, கட்சிகளைக் கலைத்துவிட்டு காங்கிரசிலே வந்து சேரும்படி விடப்படும் அழைப்பு] அப்படி ஒரு ஆபத்து, நெருக்கடி இருக்கிறது என்ற காரணம் காட்டி அல்ல.

காங்கிரசுக்கு எதிர்ப்பு வளருகிறது; காங்கிரசினால் பல முனைகளிலுமிருந்து கிளம்பித் தாக்கும் எதிர்ப்புகளைச் சமாளிப்பது சங்கடமாக இருக்கிறது ஆகவே, தனித்தனிக் கட்சிகளைக் கலைத்துவிட்டு, காங்கிரசில் சேர்ந்து அதனைப் பலப்படுத்துங்கள் என்கிறார்கள்.

காங்கிரஸ் வலிவிழந்திருக்கிறது, எதிர்ப்பு வளர்ந்திருக்கிறது, ஆகவே காங்கிரசுக்கு புதுவலிவு தர மக்கள் முன்வர வேண்டும் என்று பொதுமக்களிடம் முறையிடுவதில், வேண்டுகோள் விடுப்பதில், பொருளும் பொறுத்தமும் நியாயமும் இருக்கிறது. எதிர்க்கட்சிகளை அழைப்பதிலே பொருள் என்ன இருக்க முடியும்,

கிழப்பருவமடைந்த புலி தங்கக்காப்பு தருவதாக ஆசைகாட்டி வழிப்போக்கனைத் தன் அருகே வரச்செய்து கொன்று தின்றதாகச் சிறுவர்களுக்கான கதை இருக்கிறதே, அது பெரிய அளவில், நேர்த்தியான முறையில், மேலிடம் உள்ளவர்களால் நடத்தப்பட்டு வருவதுபோலத்தான் நமக்கு இது தோன்றுகிறது.

எது எப்படி இருப்பினும், ஒரு உண்மை இதிலிருந்து தெரிகிறது, காங்கிரசு கட்சி, ஆர்ப்பரிக்கும் நிலையிலிருந்து பல படிகள் கீழே இறங்கி வந்து, விநயமாகப் பேசி, விருந்துக்கு அழைக்கும் இயல்பைப் பெற்றுக் கொண்டு வருகிறது. வலிவு இழந்துகொண்டு வருவதனையும், தொடர்ந்து எதிர்ப்பு பல முனைகளிலிருந்தும் கிளம்பித் தாக்கியபடி இருக்குமானால், நிலைமை மேலும் மோசமாகும் என்பதனையும், காங்கிரசு கட்சி உணர்ந்து கொண்டுவிட்டிருக்கிறது. இது சுவையுடன் பயன் மிக்க ஒரு கட்டம்.

ஒரு கட்டம் இருந்தது, காங்கிரசின் குரல் தவிர வேறு குரலே நாட்டிலே கேட்காதிருந்த கட்டம்; எவரேனும் குரல் கொடுத்தாலும், அது துரோகியின் கூக்குரல் என்று மக்கள் கண்டித்த காலம்.

பிறகு ஒரு கட்டம்; காங்கிரசுக்கு எதிராக, தயங்கித் தயங்கி, தட்டுத்தடுமாறி, குரலொலி இங்குமங்குமாக எழும்பிய காலம்; மக்கள் பொருட்படுத்தவில்லை; காங்கிரசு அதனைக் கேலி செய்தே, தீர்த்துக்கட்டிவிட முடிந்தது.

பிறகோர் கட்டம் பிறந்தது; எதிர்ப்புக் குரலொலி மக்கள் செவிபுக, மக்கள் சிந்தித்துப் பார்த்து சம்மதம் தெரிவிக்க, காங்கிரஸ் கடுங்கோபம் கொண்டு, எதிர்ப்பாளர்களைத் தாக்க, போர்க்கோலம் பூண்ட காலம்.

இப்போதுள்ள கட்டம், போரிட்டு அலுத்துப்போய் படைக்கலன்கள் மழுங்கிப்போய் உள்ள நிலையில், எதிர்த்து நிற்பவர்களிடம், இன்முகத்துடன் புன்னகை காட்டி, நேசக்கரம் நீட்டி, 'நீயும் நானும் ஒண்ணு பகை நீண்டால் யாவும் மண்ணு' என்று பாடிடும் கட்டம்.

இது காங்கிரஸ் கட்சி வலிவிழந்து வருவதையும், காங்கிரஸ் எதிர்ப்பாளர்களுக்குப் பொதுமக்கள் ஆதரவு அளிப்பது வளர்ந்திருப்பதையும் எடுத்துக் காட்டுகிறது.

இனியும், பொது மக்களின் செவியில் காங்கிரசு எதிர்ப்பாளர்களின் பேச்சு ஏறியபடி இருக்குமானால், பொதுமக்கள் அடியோடு காங்கிரசை வெறுத்துத் தள்ளிவிடுவர், எனவே, எதிர்ப்பாளர்களை படைகொண்டு தாக்கித் தகர்த்திடும் முறையை நிறுத்திக் கொண்டு, பாசம்பேசி, நேசம்காட்டி, செயலற்றவர்களாக்கிடுவோம் என்று திட்டம் வகுத்துள்ளனர் காங்கிரசை நடத்திச்செல்வோர்.

காங்கிரசின் நிலைமை எதிர்ப்பாளர் நிலையைவிட்டுவிட்டு 'காப்பாளர்' வேலைக்குச் செல்ல நினைப்போருக்குத் தெரிந்துமிருக்கிறது; அதன் காரணமாக அவர்களுக்கு உச்சி குளிரும் நிலையும் ஏற்படுகிறது.

ஒரு காலம் இருந்ததல்லவா, காங்கிரசில் சேருவதற்குக் காத்திருக்கவேண்டியகாலம்.

ஒரு காலம் இருந்ததல்லவா, எப்படி இப்படிப்பட்டவர்களைச் சேர்க்கலாம் என்ற கேள்விகிளம்புவதும், புதிதாகக் காங்கிரசில் சேருபவர்களுக்காக வாதாடும் காங்கிரஸ் கர்த்தாக்கள், சகல பாவமும் கங்கையில் மூழ்கினால் தீர்ந்துபோவதுபோல, இவர்கள் முன்பு எத்தகைய தேசத்துரோகச் செயல்களைச் செய்திருந்

தாலும், காங்கிரஸ் எனும் கங்கையில், பயபக்தியுடன் மூழ்கியதால், எல்லா பாபமும் போய்விட்டது என்று சமாதானம் கூறியகாலம்,

புனிதமான காங்கிரசில் சேருகிறீர்கள், இனி புன்மதி கூடாது; ஒழுங்கு முறையுடன் இருத்தல்வேண்டும்; தேசம்—சேவை—எனும் தாரக மந்திரத்தை மறந்திடலாகாது என்றெல்லாம் 'உபதேசம்' செய்து பிறகே, புதியவர்களைக் காங்கிரசில் சேர்த்துக்கொண்டகாலம்,

சாக்கடைகளும் சமுத்திரத்தில் வந்து கலக்கும்போது, புனிதமடைவதுபோல, இவர்களெல்லாம் காங்கிரசில் சேர்ந்து புனிதத்தன்மை அடைகிருர்கள் என்று சத்தியமூர்த்தி பேசக்கேட்டது நாடு.

அந்தக்காலம் மாறியேவிட்டது; இப்போது, சேருபவர்களை, தலையில் குட்டிக்கொண்டு உள்ளே வாருங்கள் என்று கூறும் முறை இல்லை. எதிர்கொண்டழைக்கிருர்கள்! விழா நடத்துகிருர்கள்!!

எதிர்ப்புமிக அதிகமாகிவிட்டதாலல்லவா,காங்கிரசு கட்சி, நம்மை, இத்தனை மரியாதைகொடுத்து அழைக்கிறது! முன்பு, இதே காங்கிரஸ் எத்தனை முடுக்குகாட்டிற்று!!—என்று உள்ளே நுழைபவர்கள் எண்ணுமலா இருப்பார்கள்.

எனவேதான் அவர்கள், காங்கிரசில் சேரும் இந்த நாளில்,

> தெரியாமல் பல தவறு செய்துவிட்
> டோம், பொறுத்திடுக! இனி முறையான
> தொண்டாற்ற அனுமதி அருளுக!!

என்று கெஞ்சிக் கேட்டுக்கொள்ளவில்லை. மாருக, கெம்பீரத்துடன்,

> இனிக் கவலைவேண்டாம்,
> நாங்கள் வருகிருேம்;
> காங்கிரசுக்கு இனிக் கஷ்டகாலமில்லை,
> நாங்கள் காப்பாற்றுகிருேம்,
> எதிர்ப்பாளர்களைப்பற்றிக் கவலைப்படா
> தீர்கள், நாங்கள் கவனித்துக்கொள்கிருேம்;

என்று 'அபயம்' அளித்திடும் முறையில் பேசுகிருர்கள். இது வெட்கத்தை அல்ல, மகிழ்ச்சியை மூட்டியிருக்கிறது காங்கிரசாருக்கு!! வியப்பு இதுதான்! பெருத்த வியப்பு!!

முன்பு, இவர்களை ஏன் காங்கிரசில் சேர்த்துக்கொண்டோம் என்ருல், என்ற விளக்கம், காரணம்; சமாதானம் கூறுவார்கள், காங்கிரஸ் பெருந்தலைவர்கள்.

இப்போது, காங்கிரசில் சேருபவர்கள், ஏன் சேருகிருேம் தெரியுமா, என்று, காரணம் காட்டுகிருர்கள்; சேர்ந்து என்ன செய்யப்போகிருேம் தெரியுமா என்று அறிவிப்பு தருகிருர்கள்.

ஜனநாயக சமதர்மத்தைச் செயல்படுத்தவேண்டும், அதற்காகவே நாங்கள் காங்கிரசுக்குச் செல்கிருேம் என்று இவர்கள் கூறும்போது, சில காங்கிரஸ் தலைவர்கள் மகிழ்ச்சி கொள்கிருர்கள்—அந்தப்பேச்சின் உட்பொருளைப் புரிந்துகொள்ளாமல். ஜனநாயக சமதர்மத்தைச் செயல்படுத்தவே நாங்கள் காங்கிரசில் சேருகிருேம் என்று அவர்கள் கூறுவதன் பொருள், இப்போது காங்கிரசில் உள்ளவர்களால் அதுமுடியாது, அல்லது அவர்கள்மட்டும் போதாது, ஜனநாயக சமதர்மத்தைச் செயல்படுத்த, ஆகவேதான் நாங்கள் புதிய வலிவு கொடுக்கச்செல்கிருேம் என்பதுதானே! இது இன்றுள்ள காங்கிரஸ் தலைவர்களுக்கு அகமகிழ்ச்சியைக் கொடுக்கும் பேச்சா! அகமகிழ்கிருர்களாமே!!

புவனேஸ்வரத்திலே மேற்கொள்ளப்பட்ட புனிதமான ஜனநாயக சமதர்மதிட்டத்தைப் பொதுமக்களிடம் எடுத்துக்கூறி ஆதரவு திரட்டப்போகிருேம் என்று காங்கிரசில் சேருவோர்கள் பேசும்போது, மிகச் சாதாரணமானவர்களுக்குக்கூட என்ன எண்ணம் தோன்றும்! இப்போதுள்ளவர்கள், அந்த வேலையைச் செய்யவில்லை, அதற்கான வழி தெரியவில்லை, போதுமான திறமை இல்லை, அதனுல்தான் இவர்கள் செல்கிருர்கள், அதனைச் செய்திட என்றுதானே கருதுவார்கள். இது இன்றுள்ள காங்கிரசுக்குப் பெருமை தேடித்தருகிற பேச்சாகவா இருக்கமுடியும்.

"விவரம் தெரியாத ஆசாமி! அருமையான சரக்கு கைவசம் இருந்தும், அதை ஆதாயததுடன் விற்பனை செய்ய என்னென்ன செய்யவேண்டும் என்று தெரியாமல், ஈ ஓட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தான். பார்த்தேன், ரொம்பப் பரிதாபமாக இருந்தது. சரி, கவலைப்படாதே, நான் பார்த்துக்கொள்கிறேன் என்று தைரியம் சொல்லி, கடையிலே போய் உட்கார்ந்து, சரக்குடைய அருமை பெருமையை ஊரறியச் செய்து, நல்லபடி வியாபாரம் வளரச் செய்தேன்" — என்று அங்காடிப் பக்கம் அவ்வப்போது பேச்சு கிளம்புவதுண்டல்லவா! அதனுடைய 'மறுபதிப்பு' அரசியல் வட்டாரத்தில், இப்போது!!

அசோக்மேதா வெளிப்படையாகவே சொல்கிருரே திட்டங்களை நிறைவேற்றிய முறையிலே பல குளறுபடிகள் ஏற்பட்டுவிட்டன; எத்தனையோ சீர்செய்ய வேண்டி இருக்கிறது; அதைத்தான் நான் இப்போது செய்கிறேன்" என்று.

இதுவரை திட்டங்களை நடத்திவைத்த காங்கிரசின் தலையில் ஒரு குட்டு குட்டிவிட்டுத்தான், மேதா தம்முடைய புது வாழ்வைத் தொடங்கி இருக்கிருர்; இது நாள் வரையில் காங்கிரசை எதிர்த்து எதிர்த்துக் காரியத்தைப் பாழாக்கிவைத்தேன், இப்போது பிராயச்சித்தம் தேடுகிறேன் என்றுகூறி, தம்முடைய தலையில் குட்டிக்கொண்டு அல்ல.

இந்த நிலை இருக்கும்போது, மகிழ்ச்சிகொள்வது ஏனோ நமக்குப் புரியவில்லை.

எப்படியோ நடக்கட்டும், பல கட்சிகள் கலைக்கப்பட்டுவிடுவது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தனித்தன்மையை மேலும் பளிச்சென எடுத்துக் காட்டுகிறது.

கழகம் மட்டும் என்ன, நாங்களுந்தான் எதிர்க்கிருேம் காங்கிரசாட்சியின் கேடுபாடுகளை என்று கூறிக்கொண்டு வந்தவர்களில் பலர், பாத்யதை கொண்டாடியவர்களில் பலர், இப்போது ஐயப்பாட்டுக்கு இடமின்றி, 'அவ்விடத்தவர்' ஆகிவிட்டனர்; இனி, காங்கிரசை எதிர்க்கும் பொறுப்பிலே மிகப் பெரும்பகுதி கழகத்துக்கே என்ருகிவிட்டது. குறுக்குச் சால் ஓட்டுபவர்கள் விலகிக்கொண்டுவிட்டார்கள். இனி எதேச்சாதிகாரமான முறையில் காங்கிரஸ் அரசு செல்லவிடாமல் தடுத்திடும் வேலையில் மிகமிகப் பெரிய அளவு, கழகத்திடம் வந்து சேர்ந்துவிட்டிருக்கிறது. இந்நிலை நமக்கு மேலும் அதிக அளவில் பொறுப்புணர்ச்சியை உண்டாக்கிட வேண்டும்.

கூட்டு—அணி — எனும் கோலங்களைக் களைந்துவிட்டு, காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே புகுந்துவிட்டனர், இதுவரையில், நாங்களும் காங்கிரஸ் எதிர்ப்பாளர்களே

-நாங்களே உண்மையான காங்கிரஸ் எதிர்ப்பாளர்கள்- காங்கிரஸ் எதிர்பபாளர்களிலேயே நாங்கள் தான், துல்லியமானவர்கள், துளைத்திடுவதில் வல்லவர்கள் என்றெல்லாம் பேசிக்கொண்டிருந்தோர். இன்று காங்கிரசில் போய்ச் சேருவதன் பலன், என்னென்ன எவரெவருக்கு, எப்படி எப்படிக் கிடைக்கும் என்பதுபற்றிப் பொதுமக்கள் கூர்ந்து கவனித்தபடி இருப்பார்கள்.

கிணறு வெட்ட பூதம் புறப்பட்ட கதைபோலாயிற்றே என்று பழயவர்கள் பேசப்போகிறார்களோ சில காலம் சென்று, அல்லது குளிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொண்டோம் என்று வெறுப்படைந்து புதியவர்கள் ஒருநாள் பேசப் போகிறார்களோ — என்ன நடக்குமோ, யார் கண்டார்கள்!

ஓடிவந்து புகுந்துகொண்டு ஒழுங்காக இல்லாமல் ஆடினால், விட்டுவைக்கமாட்டோம் என்று காங்கிரசின் உரிமையாளர்கள் ஓர்நாள் மிரட்டலாம், ஓடோடி வந்து ஓராயிரம தடவை கெஞ்சிக் கூத்தாடி, வா உள்ளே! கண்ணே வா! மணியே வா! என்று முனபு அழைத்ததை மறந்துவிட்டு, இன்று ‘தர்பார்’ செய்கிறீர்களோ! —என்று புதிதாகக் குடிபோகிறவர்களே கேட்டுவிடக் கூடும்; எதுவும் நடக்கலாம்.

ஏனெனில், காங்கிரசில் பலர் சேருவதுபோலவே, காங்கிரசிலிருந்து பலர் வெளியேறுவதும், பல்வேறு கட்டங்களிலே நடைபெற்றிருக்கிறது. வெளியேறுபவர்கள், காங்கிரசிலே இருந்து கண்டனபற்றி பிறகு கதை கதையாக எடுத்துக்கூறியுள்ளனர்! இப்போது செல்கிறவர்கள், அங்கிலையை எப்போது பெறுவார்களோ நாமறியோம்.

அதுபோலவே, காங்கிரசில் வந்து சேரும்படி தலைவர்கள் அன்பழைப்பு விடுவதுபோலவே சிற்சில வேளைகளில் அதே தலைவர்கள், காங்கிரசில் சேர்ந்துவிட்டிருப்பவர்களைப்பற்றிக் கேவலமாகவும் கேலியாகவும் பேசுவதுமுண்டு. எடுத்துக்காட்டுக்கு இரண்டு.

> ‘சுயராஜ்யம் வந்தான பிறகு, யார் வேண்டுமானாலும் காங்கிரஸ்காரராகிவிட்டார்கள் போலிருக்கிறது! உறுப்பினர்கள் எண்ணிக்கை இலட்ச இலட்சமாகப் பெருகிவிட்டதே தவிர, காங்கிரசின் வலிவும் மதிப்பும் வளர்ந்திடவில்லை. கண்டவர்கள் 'காங்கிரசில் நுழைகிறார்கள்—தன்னலமற்ற தியாக உணர்வுடன் அல்ல — சுயநல நோக்குடன், உடையை மாற்றிக்கொண்டு, காங்கிரசாராக பாசாங்கு செய்கிறார்கள்— தங்கள் சுயநலத்துக்காக.

இது இப்போது பேசியது அல்ல; இரண்டாண்டுகட்கு முன்பு, பெங்களூரில், ஆந்திர நாட்டவர் சஞ்சீவி ரெட்டியார் பேசியது.

> இன்று காங்கிரசில் பெரும்பாலும் விரும்பத் தகாதவர்களே நிறைந்திருப்பதுகாண நான் மிகவும் வருந்துகிறேன். பலருக்கு நல்ல ஒழுக்கம் கூட இல்லை. சாராயக்கடை நடத்த லைசென்சு பெற்றவர்களும், கள்ளச்சாராயம் காய்ச்சுகிறவர்களும் காங்கிரசில் நிறைந்திருக்கின்றனர். இது நாட்டின் எதிர்காலத்திற்கு உகந்தது அல்ல. கடந்த காலத்தில் காங்கிரசில் சேருவதற்குக் காந்தியார் சில தகுதிகளை நிர்ணயித்திருந்தார். ஆனல் இன்று அதெல்லாம் கிடையாது. விளைவு, இன்று காங்கிரசில் விரும்பத்தகாதவர்களே நிறைந்துவிட்டனர்.”

யதுகிரி எனுமிடத்தில் சில ஆண்டுகளுக்கு முன்னால் கர்நாடகக் காங்கிரஸ் தலைவர் ஒருவர்—மஞ்சப்பா— என்பார் பேசியது இது.

எனவே தேவைப்படும்போது வரவேற்பதும், வேலை முடிந்ததும் கேலி பேசுவதுங்கூட, காங்கிரஸ் கையாளும் முறைகளிலே ஒன்று.

இதுபோலாயினும், அஃதன்றி பசியும் வயிறும் போல இருந்துவிடுவதாயினும், எவர் எங்கிலை பெறினும் நமக்கு இம்மி அளவும் அதுபற்றிய கவலை தேவையில்லை, நாம் ஏதேச்சாதிகாரத்தை காங்கிரஸ் நிலை நாட்டிவிடாதபடி பார்த்துக்கொள்ளவேண்டிய பெரும் பொறுப்பை மேற்கொண்டிருக்கிறோம்—அந்தக் கடமையைச் செம்மையாகச் செய்து முடிக்க, தூய தொண்டினைத் தொடர்ந்து நடத்திச்செல்வோம். இன்று காங்கிரசுக்குள் சென்றிடுவோர், இந்த நம் தொண்டினுக்குத் துணை நின்றவர்கள் அல்ல, எனவே அவர்கள் காங்கிரசில் சேருவதாலே நமக்கு எந்தவித நட்டமுமில்லை— இலாபநட்டக் கணக்குப் பார்த்துக்கொள்ள வேண்டியவர்கள், சேர்த்துக்கொள்பவர்களும்; சேரச்செல்பவர்களும்! கணக்குப்பார்க்கும் நாள் ஒன்றுவரும்! பார்த்துக் கொள்ளட்டும்!!




சின்ன காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, “அல்லி” அச்சகத்தில், (உரிமையாளர்) சி. என். ஏ. இளங்கோவால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணாதுரை.